# பரிணாமக் கோட்பாடு நம்புதற்குரியதா?

*ஓ தீமோத்தேயுவே, உன்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டதை நீ காத்துக் கொண்டு, சீர்கேடான வீண் பேச்சுகளுக்கும், ஞானமென்று பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களுக்கும் விலகு. சிலர் அதைப் பாராட்டி விசுவாசத்தைவிட்டு வழுவிப் போனார்கள் ... (1 தீமோ. 6:20, 21).*

விசுவாசத்தை அழிக்கக் கூடிய கோட்பாடுகள் கிறிஸ்தவர்களைச் சோதிக்கும்படியாக எழும்பும் என்பதைச் சர்வ வல்ல தேவன் அறிந்திருந்தார். அந்தக் கோட்பாடுகளில் சில அதிகம் அறிவுக்குப் பொருத்தமாகத் தோற்றமளித்து, ''விஞ்ஞான பூர்வமான'' ஆடைகளில் அணிவகுத்து, "அகந்தையான வீண் வார்த்தைகளைப்" (2 பேது. 2:18) பேசும் என்பதையும் அவர் அறிந்திருந்தார். ஆகையால் பிதாவானவர் தம்முடைய பிள்ளைகளுக்கு, நித்தியமான புத்தகத்தில், " 'ஞானமென்று' பொய்யாய்ப் பேர் பெற்றிருக்கிற கொள்கையின் விபரீதங்களைக் குறித்து'' எச்சரிக்கை செய்தார்.

கிறிஸ்தவர்கள் உண்மையான விஞ்ஞானத்தை எதிர்த்து நிற்கவில்லை. உண்மையான விஞ்ஞானத்தை ஏற்படுத்தியவர் தேவனே, ஏனெனில் விஞ்ஞானம் என்பது அறிவு என்பதேயாகும். தேவனுக்குள்ளும், கிறிஸ்துவுக்குள்ளும், ''ஞானம், *அறிவு* என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது'' (கொலோ. 2:3). இயற்கையில் தேவனுடைய அறிவானது எப்பொழுதுமே, வெளிப்படுத்துதலில் (வேதாகமத்தில்) தேவனுடைய அறிவுடன் ஒத்துப் போகின்றது; அதில் ஒருக்காலும் ஒரு முரண்பாடும் இருக்க முடியாது. இயற்கையைப் பற்றிய மனிதரின் யூகங்கள் தேவனுடைய வெளிப்பாட்டுடன் முரண்படலாம், ஆனால் உண்மை நிறைந்த கிறிஸ்தவர்கள், மனிதரின் யூகங்களை உண்மையான விஞ்ஞானத்தில் இருந்து எப்போதுமே பிரித்து அறிய வேண்டும். ஒரு மனிதன் அறிந்துள்ளது என்பது அவன் அறிந்துள்ளதாக நினைப்பதிலிருந்து மாறுபட்டிருக்க முடியும், மற்றும் இயேசுவின் சீஷர்கள் மனிதரின் கருத்துக்களின் காரணத்தினால் வேதாகமத்தை எறிந்து விடத் தயாராய் இருப்பதில்லை.

கிறிஸ்தவர்கள் விஞ்ஞானத்தைப் பொறுத்தமட்டில் தப்பெண்ணமும் நேர்மையின்மையும் கொண்டிருப்பதாகப் பலமுறை குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். அது ஒரு தவறான குற்றச்சாட்டாக உள்ளது, ஆனால்

அப்படியே இருந்தாலும் கூட, பரிணாமக் கொள்கைக்காரர்களும் அதே குற்றச் சாட்டிற்குக் கீழானவர்களாகவே இருப்பார்கள். அவர்களில் ஒருவர், நடுநிலையான ஒரு மனிதரைக்கூடத் திருப்திப் படுத்துவதற்கு இயற்கையில் போதுமான உண்மைகளைக் கண்டறியாத நிலையில், பரிணாமத்தை "நிரூபிப்பதற்காக" தகவலை உண்மையில் தவறாகத் தந்தார். எர்ன்ஸ்ட் ஹேயக்கெல் என்பவர், "தொடக்கக் கருக்களின் விளக்கங்களைத் தவறாகக் கூறியது மட்டுமின்றி, தொடக்கத்தில் அவை பெற்றிருந்த பெயர்களை விடுத்து, வேறு பெயர்களை அவர் அவைகளுக்குக் கொடுத்திருந்தார், அதன் மூலமாகக் கோபம் அடைந்த பேராசிரியர் அன்ட்டோன் ஹிஸ் என்பவர், ஹேயக்கெல் பொய்யுரைக்கின்றார் என்று வெளிப்படையாக அறிவிக்கும் படி செய்தார். பேராசிரியர் அர்னால்டு பிராஸ் என்பவர், 'ஹேயக்கெல்லுக் காக நானே அப்படங்களை வரைந்து கொடுத்ததால், நான் நேரடியாகப் பெற்றுக் கொண்ட மிகச் சரியான அறிவிலிருந்து நான் இந்தக் குற்றச் சாட்டுகளை ஏற்படுத்த முடியும்' " என்று கூறினார்.[1] வஞ்சனையில் பிடி பட்ட, விஞ்ஞான அறிஞர் என்றழைக்கப்பட்ட அதே மனிதர், "எனது படங்களில் சிறிய எண்ணிக்கையானது உண்மையில் திருட்டுத்தனமான வையாகும் என்று மனவருத்தத்துடன் உடனடியாக அறிக்கையிடத் தொடங்குகின்றேன் ..."[2] என்று கூறினார். வேதாகமத்தை விசுவாசிப்பவர் கள் தங்கள் கருத்தை நிரூபிக்கப் பொய்யானவைகளைக் காட்டியதாகக் குற்றம் கொண்டிருக்கவில்லை; சத்தியத்திற்கு இவ்வகையான ஆதரவு எதுவும் தேவையில்லை, அப்படிப்பட்டவைகளை அது கொண்டிராது.

இருப்பினும், பரிணாமக் கொள்கையானது, அதை உயர்த்திப் பிடிக்கத் தந்திர வேலைப்பாடு நடந்ததால் மட்டும் அதிர்ச்சியடைந்து விடவில்லை. பரிணாமக் கொள்கையை நம்புவதற்கு அதன் வழிபாட்டாளர்கள் என்ன காரணங்களைப் பெற்றிருந்தனர்? பரிணாமக் கொள்கைக்காரர்கள் பலத்த ஆதாரங்களை அளிக்க முடியும் என்று சொன்ன போது கிறிஸ்தவர்கள் தாங்கள் அதற்குப் பயப்படவில்லை என்று கூறியது வெறும் தற்புகழ்ச்சி யல்ல, ஏனெனில் சத்தியம் சத்தியமாகவே உள்ளது. பரிணாமம் என்பது உண்மையாய் இருந்தால் (அது உண்மையல்ல) அதை எதிர்த்துப் போராடுவது கிறிஸ்தவர்களுக்கு எந்த நன்மையும் செய்து விடாது.

## மிகப் பலத்த ஆதாரங்கள்

*1. ஒத்த தன்மைகள்.* "மனிதக் குரங்கானது எவ்வளவாய் மனிதனைப் போல் உள்ளது என்பதை நீங்கள் காண்பதில்லையா?'' என்பது பரிணாமக்காரர்களின் மிகப் பொதுவான விவாதமாக உள்ளது. இது மனிதன் மனிதக் குரங்கிலிருந்து பரிணமித்தான் என்று நிரூபிக்கிற தென்றால், ஒரு கேடிலாக் காரானது ஃபோர்டு காரிலிருந்து பரிணமித்தது என்றும் நிரூபிப்பதாய் இருக்க வேண்டும், ஏனெனில் அவை இரண்டிற் குமிடையில் குறிப்பிடத்தக்க ஒத்த தன்மைகள் உள்ளன. மனிதனும் விலங்குகளும் சில ஒத்த தன்மைகள் கொண்டுள்ளனர் என்ற உண்மையிலிருந்து, ஒருவர் மிகவும் தர்க்கரீதியாக, "அது, ஒரே மாபெரும்

*தேவன் எல்லாவற்றையும் படைப்பவர் என்று காண்பிக்கின்றது" என்று கூறுவார்.*

*2. தொகுத்தல்.* சிலர் இன்னமும், மனிதத் தோற்றக் கருவானது ஒன்பது மாத கருவளர்ச்சி காலத்தில் பல இலட்சக்கணக்கான ஆண்டுகளின் பரிணாம வரலாற்றைத் ''தொகுக்கின்றது'' அதாவது அக்கருவானது மீனிலிருந்து ஊரும் பிராணியாக, ஒரு பறவையாக, ஒரு பாலூட்டியாக மாறு கின்றது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். இப்படிப்பட்டவைகள் யாவும் கிறுக்குத்தனமான யூகமாய் உள்ளது மற்றும் பின்வரும் இரு காரணங்களினால் இது மதியீனமானதாயிருக்க வேண்டும் என்று காண்பிக்கப்படுகின்றது: (அ) "தொகுத்தல்" விதியானது ஒரே முன்னோர் களைக் கொண்டுள்ளதாக யூகிக்கப்படும் தாவரங்களுக்கு ஏற்புடைய தாயிருப்பதில்லை என்பது ஒப்புக் கொள்ளப்பட வேண்டும், மற்றும் (ஆ) மனிதக் குரங்கின் தோற்றக் கருவினுடைய மண்டையோடானது (இன்னொரு) மனிதக் குரங்கைக் காட்டிலும் மனிதனுடைய மண்டை ஓட்டுடன் அதிகமாய் ஒத்திருக்கின்றது, இது ("தொகுத்தலின்"படியாக) மனிதக் குரங்கானது மனிதனாகி, பிறகு திரும்பவும் அது மனிதக் குரங்காகின்றது என்பதாயிருக்கும்.

*3. இரத்தப் பரிசோதனைகள்.* பரிசோதிக்கப்பட்ட முப்பத்து நான்கு மனிதர்களில், ஏழு பேர் "குறிப்பிடத் தக்க" அளவில் மனிதர்களாயும் மூன்று பேர் ''சராசரியாக'' மனிதர்களாயும் இருந்ததாக நிரூபிக்கப்பட்டனர் என்பதில் இரத்தப் பரிசோதனைகளின் பிரித்தறியும் திறனற்ற தன்மை யானது காண்பிக்கப்படுகின்றது.[3] மேலும் பரிசோதனை முடிவுகள், எட்டு மனிதக் குரங்குகள் முற்றிலுமாக மனித இரத்தத்தைக் கொண்டுள்ளன என்று காண்பித்தன, ஆகையால், பரிசோதனைகள் நம்பகமானவையாய் இருந்தால், மனிதக் குரங்குகள் சில மனிதர்களைக் காட்டிலும் அதிகமாய் மனிதத் தன்மையுடையவைகளாய் உள்ளன! ஒரே விதமான இரத்தத்தை பரிசோதனை செய்த விஷயத்தில், அதன் முடிவுகள், பன்றியின் நெருங்கிய உறவினர் திமிங்கிலம் என்று சுட்டிக்காட்டியிருக்க, அதே முடிவுகள் திமிங்கிலத்தின் நெருங்கிய உறவினர் வெளவால் என்றும் ஆலோசனை தந்தன!

*4. இனப் பெருக்க உற்பத்திகள்.* இனப்பெருக்கத் தொழில் முறையாளர்கள் அற்புதமாய்ப் பணிபுரியும் குதிரைகள், மற்றும் பந்தயக் குதிரைகளையும், பன்றிகள் மற்றும் பண்ணை விலங்குகளையும் மேம்படுத்த முடிந்திருப்பினும் அவர்கள் குதிரைகளை அல்லது கால் நடைகளையே உற்பத்தி செய்ய முடிந்ததேயன்றி புதிய உயிரினங்கள் எதையும் உற்பத்தி செய்ய முடிந்ததில்லை. அவர்கள் எத்தனை முறை குதிரைகளை இனப்பெருக்கம் செய்ய வைத்தாலும், அவர்கள் குதிரை களையே அன்றி வேறெதையும் பெற்றதில்லை. அவர்கள் ஏறக்குறைய இரண்டு நூற்றாண்டுகளாக மிகவும் கடின முயற்சி செய்தனர், இது யாவும் பரிணாமத்தைத் திட்டவட்டமாக எதிர்ப்பதாகவே உள்ளது. செயற்கை இனப்பெருக்க முறையானது புதிய உயிரனங்களை உண்டாக்க முடிவல்லையாகையால், வழிகாட்டப்படாத, சிந்தனையில்லாத பரிணா

மம் என்பது இதை எப்படிச் செய்திருக்க முடியும்? குதிரைகளை ஒருவர் கவனிக்கையில், முரட்டுத்தனமான பழைய கோவேறுக் கழுதைகள் பரிணாமக்காரர்களின் வழியில் முழுமையாக நிற்கின்றன. ஒரே இனத்தைச் சேர்ந்த குதிரையையும் கழுதையையும் இனவிருத்தி செய்தபோது, ஒரு கலப்பினம், ஒரு கோவேறுக் கழுதை உற்பத்தியாயிற்று. இருப்பினும் கோவேறுக் கழுதை தனது இனத்தை மறு உற்பத்தி செய்ய முடியாது; புதிய உயிரினமானது அதிலிருந்து உண்டாக முடியாது. இயற்கை யாவையும் அந்தக் கோவேறுக் கழுதையைப் போலவே பிடிவாதமானதாகவே உள்ளது; அது விஞ்ஞானிகளின் இன்னொரு பயிர் என்ற புதிய யூகங்களுடன் மாற்றம் கொள்ள மறுக்கின்றது.

*5. சான்றடையாள உறுப்புக்கள்.* மனிதனின் குடல் வால், அவனது பீனியல் சுரப்பி மற்றும் தைராய்டு சுரப்பி ஆகியவை பரிணாம உடலின் முந்திய உறுப்புக்களின் காய்ந்து போன எச்சங்கள் என்பதாக பரிணாமக் கொள்கையாளர்களால் கருதப்பட்டது. ஏனென்றால் அவர்கள் அந்த உறுப்புக்களின் பயன் நிறைந்த நோக்கம் எதையும் அறியாதிருந்தனர், மற்றும் பரிணாமத்தை நிரூபிக்க ஆவலுள்ளவர்களாய் இருந்தனர், எனவே அவர்கள் அறிவுக்குப் பொருத்தமாகத் தோன்றுகின்ற தங்கள் யூகங்களை ஏற்படுத்தினர். இப்பொழுது உண்மையான விஞ்ஞானமானது அந்த உறுப்புக்களுக்குத் தேவனால் கொடுக்கப்பட்ட நோக்கங்களை ஒவ்வொன்றாகக் கண்டறிந்து கொண்டுள்ளது. தைராய்டு சுரப்பு நீரானது பெரும்பாலும் அயோடின் கொண்டதாக உள்ளது, இது ஆரோக்கியத்திற்கு முற்றிலும் அவசியமானது என்று அறியப்பட்டுள்ளது. பீனியல் சுரப்பி என்பது மூன்றாவது கண்ணின் எச்சம் என்பதற்குப் பதிலாக, அது உடலின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துகிறது என்று இப்பொழுது விஞ்ஞானம் அறிகின்றது.[4] குடல்வாலும் கூட மதிப்புமிக்க உறுப்பாகவே உள்ளது என்று ஜான் ஹாப்கின்ஸ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த முனைவர். ஹோவர்டு A. கெல்லியால் கூறப்பட்டுள்ளது: "அது சுரத்தல் மற்றும் உறிஞ்சுதல் ஆகியவற்றிற்காக குடலின் தசைப் பரப்பின் அளவை அதிகரிக்கின்றது."[5]

*6. புதை படிவ எச்சங்கள்.* விலங்குகளின் எலும்பின் எச்சங்கள் மற்றும் பாறைகளில் அவைகளின் ஆழ்ந்த பிளவுகள் ஆகியவை மூலம் கொள்கையை நிரூபிக்கப் பலர் முயற்சி செய்துள்ளனர். இருப்பினும், அந்த எச்சங்கள் யாவும் மிக அதிகமாய் மேம்படுத்தப்பட்ட வடிவங்களாகவே உள்ளன - தொடர்பு இணைப்புகள் எதுவும் இல்லை, பாதிப் பூனையும் பாதி நாயுமான எதுவும் இல்லை, எந்தவொன்றிலும் அரைகுறையான நிலை என்று எதுவும் இல்லை. இந்தப் படிமங்கள் இனப்பெருக்கமானது இப்பொழுதுள்ளதைப் போலவே அப்பொழுதும் இருந்துள்ளது என்பதற்கு சாட்சியம் அளிக்கின்றன: ஒவ்வொரு உயிரினமும் அதனதன் வகையையே இனப் பெருக்கம் செய்தது.

*7. பாதத்தில் ஐந்து பிரிவு கொண்ட குதிரை.* செம்மறியாட்டளவான ஒரு குதிரையை ஒத்துள்ள ஐந்து பிரிவு கொண்ட கால்கள் கொண்ட விலங்கு ஒன்றின் எலும்புகள் சில கண்டறியப்பட்டுள்ளதால், நவீன காலப் பெரிய குதிரையின் பரிணாமத்திற்கான எடுத்துக்காட்டு ஒன்றைத் தாங்கள்

பெற்றுள்ளதாகப் பலர் முடிவு செய்தனர். குதிரையானது சிறு விலங்கு ஒன்றிலிருந்து பரிணாமம் ஆயிற்று என்று அவர்கள் எப்படி அறிந்தனர்? அந்தச் சிறு விலங்கு இருந்த காலத்திலேயே பெரிய குதிரையும் வாழ்ந்திருக்க வில்லை என்று அவர்கள் எப்படி அறிந்தனர்?

*8. தவறிய இணைப்புகள்.* கடவுளற்ற பரிணாமக் கொள்கையின் பக்தர்கள், மனித குரங்கிற்கும் மனிதனுக்கும் இடையில் தாங்கள் ஒரு இணைப்பைக் கண்டுபிடித்து விட்டதாக மிகவும் அடிக்கடி உலகத்திற்குக் கூறுகின்றனர். பாதி மனிதக் குரங்கும் பாதி மனிதனுமான, பல இலட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த புகழ் பெற்ற நியான்டர்தால் இனத்தைச் சேர்ந்த மனிதனின் மண்டை ஒடு ஒன்று அதன் வரலாற்றிற்காக ஜெர்மனியில் காணப்பட்டுள்ளது. தப்பெண்ணம் கொண்ட பரிணாமக் கொள்கையாளர்கள் தற்போதும் கூட அப்படிப்பட்ட மண்டை ஒட்டுடன் மனிதர்கள் வாழ்கின்றனர் என்று கூறுவதில்லை. புகழ்பெற்ற ஜாவா மனிதனுக்கு மிகப் பரந்த அடையாளப்படுத்துதலைப் பெற்றுத் தருவதற்காக Pithecanthropus erectus ("நிமிர்ந்து நிற்கும் குரங்கு - மனிதன்") என்ற பெயர் கொடுக்கப்பட்டது; அவர்கள் வைத்திருந்தது எல்லாம் அவனுடைய மண்டையோட்டின் ஒரு பகுதியும், இரு பற்களும் மற்றும் ஒரு தொடை எலும்பும் மட்டுமேயாகும். இப்பொழுது விஞ்ஞான அறிஞர்கள், அந்தத் தொடையெலும்பும், ஒரு பல்லும் மனிதனு டையதாயிருக்க, மண்டை ஓடும் இன்னொரு பல்லும் (சுமார் ஐம்பது அடிகளுக்கு அப்பால் காணப்பட்ட) ஒரு மனிதக் குரங்கினுடையதாகும் என்று அறிகின்றனர். மனித மண்டை ஓட்டை கோழியின் எலும்புக் கூட்டில் வைத்தல் போன்ற அவ்வித எலும்புகளின் கலப்பினால், ஒருவர், கோழிகள் மனிதரின் பாகமாய் இருந்தன என்று ''நிரூபிக்கலாம்.'' இங்கிலாந்தில் கண்டறியப்பட்ட சிம்பான்ஸி எலும்புகளும் மனித எலும்பு களும் இவ்வகையானதாகவே இருந்தன; ஒன்றுகூட்டிச் சேர்க்கப்படுகை யில், இந்த எலும்புகள், eoanthropus என்று பரிணாமக் கொள்கையாளர்கள் அழைக்கும் எலும்பு மண்டலத்தை உண்டாக்கின.

## அறிவுக்கு ஒவ்வாதவைகள்

ஒரு கிறிஸ்தவர், கிறிஸ்து மரித்தோரிலிருந்து உயிர்த்தார் என்று உறுதிப்படுத்தும்பொழுது, பரிணாமக் கொள்கையாளர்களில் பெரும் பான்மையானோர், சிரித்து, "அறிவுக்கு ஒவ்வாதது! இது இயற்கைக்கு எதிரானதாக உள்ளது!" என்று கூறுகின்றனர். இருப்பினும், முதலையின் செதில்கள் இறகுகளாக முடியும் என்று நம்புவதென்பது அவர்களுக்கு அறிவுக்கு ஒவ்வாததாக இருப்பதில்லை. அது போலவே, ஒரு தவளையின் குளிர்ந்த இரத்தமானது ஒரு கோழியின் சூடான இரத்தமாக முடியும் என்று நம்புவதும் அவர்களுக்குக் கடினமானதாக இருப்பதில்லை. அது போலவே மிகவும் சுலபமாக அவர்கள், ஒரு ஆமையின் வலது பாதமானது ஒரு சிகப்புப் பறவையின் இறகாயிற்று என்றும் கூறுகின்றனர்!

யூகிக்கப்பட்ட சில மாற்றங்களின் சாத்தியமின்மையானது ஒவ்வொரு

வருக்கும் தெளிவான ஆதாரமாயிருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, நில வாழ் விலங்குகளாக மாறிய மீனானது அது இட்ட முட்டையின் வகையை மாற்றியிருக்க வேண்டும் என்று யூகிக்கப்படுகின்றது. கடலில் முட்டை யானது போதிய அளவு திடப் பொருளாய் இருந்தது ஆனால் திரவமாய் இருந்ததில்லை, திரவமானது கடலினால் கொடுக்கப்பட்டது. தரையில், முட்டையானது ஒரு மேல் உறையினால் மூடப் பட்டிருக்க வேண்டிய தாயிற்று. இந்த உறையானது வெள்ளைக் கருவில் இருந்து தண்ணீரை விடுவிக்க அமிலத்தையும், தோற்றக் கருவின் உடலிலிருந்து உண்டாகும் அசுத்தங்களை நீக்கத் தண்ணீரையும், அந்த அசுத்தங்களை வைத்திருக்கத் தனிப்பட்ட ஒரு தொட்டியையும் கொண்டிருக்க வேண்டியதாயிற்று. பின்பு, மேல் ஓட்டை உடைக்க தோற்றக் கருவானது ஒரு அலகையும் தயாரிக்க வேண்டியிருந்தது. இவை யாவும் உண்மையாக ஒரு இரவுக்குள் நடந்தேற வேண்டியதாயுள்ளது, அல்லது அந்த உயிரானது வாழ முடிந்திராது![6] இது பல லட்சக்கணக்கான ஆண்டுகளாகப் படிப்படியாக வளர்ச்சி பெற்ற பரிணாமச் செயல்முறை போல ஒலிக்கின்றதா?

ஒரு திமிங்கிலமானது பரிணாமத்தின் ஆயிரக்கணக்கான ஆண்டுகளினூ டாகத் தனது மார்புக் காம்பைச் சுற்றி, "அதன் குட்டியின் மூக்கினுள் பாலுடன் உப்புத் தண்ணீர் புகுந்து விடாதவாறு" ஒரு பையினை வளரப் பெறுவதற்குப் பல ஆண்டுகள் தேவைப்பட்டதென்றால், திமிங்கிலக் குட்டியானது அதுவரை பாலுக்கு என்ன செய்திருக்கும்?[7] இளந்திமிங்கிலத் திற்குப் பால் கொடுக்கும் காலங்களுக்கிடையில் எவ்வளவு காலம் கடந்திருக்கும்?

பாலூட்டிகள் ஊரும் பிராணிகளிலிருந்து பரிணாமம் பெற்றன என்றால் பாலூட்டிகள் குட்டிகளுக்குப் பால் கொடுக்கும் வகையில், ஒரே தலைமுறையில் தாயும் குட்டியும் ஒன்றாகப் பரிணாமம் கொண்டிருக்க வேண்டும். தாயானது மார்புக் காம்புகளையும் சேயானது மென்மையான, தசையுடைய உதடுகளையும் ஒரே வேளையில் பரிணாமப் படுத்தியிருக்க வேண்டும்.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் நகைக்கக் கூடிய பரிணாமக் கொள்கையின் யூகங்களைக் காண்பிப்பதில் குறைவுபட்டிருந்தால், இதைக் கவனியுங்கள்: சுயநலத்தின் சிறு சுவடின்றி இருந்த, மனிதரின் மாபெரும் ஆசீர்வாதமானவரான பரிபூரணப்பட்ட ஒரு மனிதரான இயேசு, ஒரு மனிதக் குரங்கின் முன்னோடித்துவத்தைப் பகிர்ந்து கொள்கின்றார் என்று பரிணாமக் கொள்கையானது கூறுகின்றது!

## எதிரான உண்மைகள்

மனிதன் இது வரையிலும், 900,000 விலங்கின உயிர் வகைகளையும், முப்பது இலட்சம் வகையான இதர உயிரினங்களையும் கண்டு பிடித்துள்ளான், அவை ஒவ்வொன்றும் "[அதனதன்] வகையையே" கொண்டு வருகின்றது (இனப் பெருக்கம் செய்கின்றது). என்ன ஒரு திரளான சாட்சிகள்![8] அவை யாவும் சர்வ வல்லவர் கட்டளையிட்டதாக மோசே

கூறியதையே செய்கின்றன: *"பின்பு தேவன், 'பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும், ஜாதி ஜாதியாகப் பிறப்பிக்கக் கடவது' என்றார்; அது அப்படியே ஆயிற்று"* (ஆதி. 1:24). இயற்கையானது பரிணாமத்தைப் பொய்யாக்குகின்றது; ஆனால் மோசே சத்தியத்தைக் கூறினார் என்று சிறு கிருமி முதல் திமிங்கிலங்கள் வரை, பல இலட்சக் கணக்கான வழிமுறை களில் நாள்தோறும் இயற்கையானது சொல்கின்றது.

மனிதன் தானே, பரிணாமத்திற்கெதிரான மற்றொரு மாபெரும் உண்மையாக உள்ளான். மனிதனை விலங்கின் ஒரு வகை என்று வகைப் படுத்துவது நியாயமானதாயிருக்காது. சரீரப் பிரகாரமான ஒருவழியில் மாத்திரமே அவனது சுயமானது எவ்வகையிலாவது மனிதக் குரங்கினைப் போன்றதாக உள்ளது. மனிதன் மும்மையின் இருப்பாக - உடல், மனம் மற்றும் ஆத்துமா உடையவனாக இருக்கின்றான். அவனது ஆத்துமா என்பது அவனது உடல் இருப்பது போலவே நிச்சயமான உண்மையாய் இருக்கின்றது, மற்றும் நிச்சயமான உண்மைகள் என்பவை அழுத்தமான வைகளாய் இருக்கின்றன. மனரீதியான வழியில், மனிதன் மிருகங்களைப் போல தோற்றமளிப்பதில்லை. ஒரு குரங்கானது இந்திய ஜனாதிபதியின் மாளிகையையோ அல்லது ஐ.என்.எஸ். விக்ரந்த் போன்ற கப்பலையோ கட்டத் தொடங்கும்பொழுது அதனுடைய மனதை மனிதனின் மனதுடன் ஒப்பிட வேளை கிடைக்கும்.

விலங்குகள் வளர்ச்சி எதையும் ஏற்படுத்துவதில்லை; அவைகள் வரலாறு முழுவதிலும் அதே மரங்களில் வாழ்ந்து கொண்டு அதே செயல்களைச் செய்து கொண்டுள்ளன. மனிதன் மட்டுமே இந்தப் பூமியில் முன்னேறிச் செல்பவனாயிருக்கிறான். மனிதன் பேசும் சக்தியைக் கொண்டுள்ளான் ஆனால், "பேராசிரியர் மாக்ஸ் முல்லர் மொழிகள் பற்றிய தனது புத்தகத்தில் இது ஒன்று மட்டுமே 'எந்த விலங்கும் கடக்க முடியாத எல்லையாக உள்ளது' என்று கூறுகின்றார்."[9] எந்த ஒரு கொரில்லாக் குரங்கும் கொலை செய்ய முயன்றதாக ஒருபோதும் கைது செய்யப்படவில்லை அது பொறுப்பாவ தில்லை என்று நாம் அறிந்துள்ளோம், ஏனென்றால் மனிதனுக்குள்ள மனச்சாட்சி, ஒழுக்க உணர்வு, சரி தவறு என்ற அறிவு ஆகியவை அதற்கு இல்லை. இவைகளை மனிதன் கொண்டுள்ளான். அவன் இரு கால்களைக் கொண்டுள்ளான் என்ற உண்மையைப் போலவே இதுவும் ஒரு உண்மை யாக உள்ளது மற்றும் இந்தப் பண்புகளை அவன் ஒரு கொரில்லா விடமிருந்தோ அல்லது வேறு ஏதேனும் விலங்கிடமிருந்தோ பெற்றிருக்க வில்லை என்பது உறுதியாகும், ஏனெனில் அவைகள் இவ்விதப் பண்பு களைக் கொண்டிருப்பதில்லை. *மனிதன் விலங்குகளுடன் வகைப்படுத்தப் படக் கூடாது.* வானங்கள் பூமியை விட எவ்வளவு உயரமாய் இருக்கின் றனவோ, மனிதன் விலங்குகளை விட மேலாக அவ்வளவு உயரமாயிருக் கின்றான். எந்த விலங்கும் மேலான வல்லமையை நோக்கி தாழ்மையாய் ஆராதிக்க வணங்குவதில்லை; அதற்கு ஆராதனை என்றால் என்ன என்று தெரிவதில்லை. மனிதன் அவ்வாறு செய்கின்றான்; எல்லா மனிதர்களுமே அவ்வாறு செய்கின்றனர். ஒவ்வொரு மனிதனும் ஏதோ ஒன்றை ஆராதிக்

கின்றான், ஆனால் எந்த விலங்கும் ஏதொன்றையும் ஆராதிப்பதில்லை. இது மறுக்க முடியாத உண்மையாக உள்ளது; மற்றும் ஆராதிக்கும் தன்மையே இல்லாத ஒரு குரங்குத் தந்தையிடம் இருந்து மனிதன் தன் ஆராதிக்கக் கூடிய தன்மையைப் பெற்றதில்லை என்பதும் சம அளவுக்கு உறுதியாக உள்ளது. ஆம், மனிதன் கார்பன், சோடியம், ஹைடிரஜன் மற்றும் பிற வேதியல் பொருட்களால் ஆனவன்தான், ஆனால் அது அவனது கீழான சுயமாக அவனது மாம்சமாக உள்ளது. மனிதனுக்கு இதை விட அதிகமானது ஒன்றுள்ளது; அந்த "அதிகமானது" ஆதி. 2:7ல் கொடுக்கப்பட்டுள்ள விளக்கத்தைக் காட்டிலும் மேலான விளக்கம் ஒன்றை ஒருக்காலும் பெற்றிருந்ததில்லை; தேவனாகிய கர்த்தர், "... ஜீவ சுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார்; மனுஷன் ஜீவாத்துமாவானான்."

## இதன் விளைவுகள்

பரிணாமக் கொள்கையானது வாழ்வை எந்த நோக்கமுமற்ற வெறுமையானதாக்குகின்றது. மனிதனுக்கு ஆத்துமா இல்லையென்றால், உயிர்த்தெழுதல் இராது, பரலோகமும் இராது. பரலோகம் இல்லையென்றால், நீங்கள் எவ்வளவுதான் தியாகம் செய்தாலும், மற்றவர்களுக்கு உதவ நீங்கள் எவ்வளவு தான் உழைத்தாலும், ஒரு பன்றியைக் காட்டிலும் அதிகமான பலனை நீங்கள் பெறமாட்டீர்கள். நரகம் இல்லையென்றால், ஒரு மனிதன் எவ்வளவு துன்மார்க்கன் ஆனாலும் - விலங்குகள் செய்யாததைக் கூட அவன் செய்தாலும் - தண்டனை எதுவும் வரப் போவது இல்லை. தேவனுடைய வாக்குத்தத்தங்கள் இல்லாத நிலையில், வாழ்வானது மாயையானதாகி விடும். ஒரு நட்சத்திரத்தைக் காண நம்பிக்கையற்றுப் போனால், ஒரு இறகடிப்பு ஒலியைக் கேட்க முடியாத கவனிக்கும் அன்பு இல்லாது போனால் மனிதன் எல்லா உயிர்களிலும் மிகவும் பரிதபிக்கப்படத் தக்கவன் ஆகி விடுவான்.[10] பரிணாமக் கோட்பாடு உண்மையென்றால், வாழ்வானது அர்த்தமற்றதாகின்றது, மற்றும் நம்மை உண்டாக்கிய பரிணாமக் கடவுளானது நம்மை இகழ்ந்து பேசி, ஏங்க வைக்கின்றது: வாழ்வது என்பதன் அர்த்தம் என்ன என்ற ஒரு சுவையை நமக்களித்து, எப்பொழுதும் வாழும்படி நம்மை விரும்பச் செய்து, பிறகு நம்மை எதிர்பாராத வகையில் ஒரு பசுவின் விதியைக் கொண்டிருக்கும்படி குதறி விடுகின்றது. இதுவே பரிணாமக் கொள்கையின் பிரகாசமான, நம்பிக்கையூட்டுகின்ற செய்தியாகும்.

பரிணாமக் கொள்கையானது இயேசுவைத் தவறாக்கி, அவரைப் பொய்யராக்குகின்றது. அது விஷயத்தை மிகவும் பலத்ததாக விளக்குகின்றதா? இல்லை, ஏனெனில் விரைவிலேயே மக்கள் கிறிஸ்தவத்திற்கும் பரிணாமக் கொள்கைக்கும் இடையில் உள்ள பெரும்பிளவைக் காண்பார்கள், விரைவிலேயே பரிணாமத்தின் பிடியானது தளர்ந்து விடும். இயேசு ஆதியாகமத்தை விசுவாசித்தார், மற்றும் அதிலிருந்து மேற்கோள் காட்டினார் (ஆதி. 2:25; மத். 19:5; மாற். 10:7 ஆகியவற்றைக் காணவும்). பரிணாமக் கொள்கையாளர்கள் ஆதியாகமம் உண்மையை உரைக்கின்ற

தென்பதை நம்புவதில்லை. இவ்விதமாக, ஆதியாகமத்தைப் புறக்கணிப்பதென்பது இயேசுவைப் புறக்கணிப்பதாகும். இயேசுவைப் பின்பற்றுபவராக இருந்து கொண்டு அதே வேளையில் மோசேயைப் புறக்கணிப்பதும் இயலாத ஒன்றாகும், ஏனெனில் இயேசு, *"நீங்கள் மோசேயை விசுவாசித்தீர்களானால், என்னையும் விசுவாசிப்பீர்கள்; அவன் என்னைக் குறித்து எழுதியிருக்கிறானே. அவன் எழுதின வாக்கியங்களை நீங்கள் விசுவாசியாமலிருந்தால் நான் சொல்லுகிற வசனங்களை எப்படி விசுவாசிப்பீர்கள் என்றார்"* (யோவா. 5:46, 47).

மனிதன் மிக உயர்ந்த ஒரு விலங்காக மட்டுமே இருந்தால், இயேசுவின் மரணம் ஒரு வெட்கமான விஷயம் மட்டுமல்ல - அது மதியீனமானதாயிருக்கும், ஏனெனில் வெறும் விலங்கு ஒன்றுக்கு மீட்பு தேவையில்லை. விஷயம் அப்படியிருப்பின், கவனத்துடன் திட்டமிடப்பட்ட இயேசுவின் வாழ்வு, எல்லா மனிதர்களின் பாவங்களுக்காகப் பாடுபட்டு மரிப்பதற்காக அவர் எருசலேம் சென்றது ஆகிய அனைத்தும் தேவையற்றதாகி விடும். பரிணாமக் கொள்கையின் போதனைகள் உண்மையாயிருந்தால், மனிதர்கள் பாவமற்றவர்களாய் இருப்பார்கள், மற்றும் அவர்கள் நரகத்திற்குச் செல்வதினின்று இரட்சிக்கப் படுவது தேவையில்லாதபடிக்கு நரகமே இருக்காது. இயேசுவின் மூலமாக மட்டுமல்ல பரிணாமக் கொள்கையின் மூலமாகவும் கூட எவரொருவரும் ஜெபிக்க உரிமைகோர முடியாத அளவுக்கு பரிணாமக் கொள்கையின் விளைவுகள் அவ்வளவு மோசமானதாகவும், வெகுதூரம் சென்றடைவதாகவும் உள்ளன.

## இது கடந்து போகும்

"விஞ்ஞானம்" என்று தவறாக அழைக்கப்படுகின்ற இந்த எண்ணக் கோளாறானது, மற்ற கட்டுக்கடங்காத யூகங்களுடன் கூட ஒரு சில ஆண்டுகளில் கடந்து போய் விடும். விஞ்ஞான கோட்பாடுகளும், கற்பனையான யூகங்களும் வந்து போகின்றன. இன்று பயன்படுத்தப்படும் ஒரு பாடப் புத்தகமானது நாளை இகழப்படுகின்றது. தேவனுடைய புத்தகத்திற்கு முரணான எல்லா யூகங்களும் புல்லின் பூவைப் போன்றனவாகவே உள்ளன: *"புல் உலர்ந்தது, அதின் பூவும் உதிர்ந்தது. கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும்" (1 பேது. 1:24ஆ, 25அ).*

குறிப்புகள்

[1]Alfred W. McCann, *God - or Gorilla* (New York: Devin-Adair Co., 1925), 154-55. [2]Quoted in Douglas Dewar, *Difficulties of the Evolution Theory* (London: Edward Arnold & Co., 1931), 39. [3]Ibid., 31. [4]*Oliphant-Smith Debate* (Nashville: Gospel Advocate Co., 1952), 128. [5]Ibid., 132. [6]Dewar, 68-69. [7]Ibid., 86. [8]Adapted from W. W. Otey, *Creation or Evolution* (Austin: Firm Foundation Publishing Co., 1930), 110. [9]E. M. Roberts, *The Mystery of Life* (St. Louis: Publicity Service Co., 1933), 511. [10]Adapted.

## *"சத்திய தேவன்"*

*தேவனைச் சார்ந்திருக்கக் கூடிய தன்மையானது ஏசா. 65:16ல் ஏசாயாவின் விவரிப்பான 'Elohe 'Amen, "சத்திய தேவன்" என்பதில் முன் வைக்கப்பட்டுள்ளது: "அதினால் பூமியிலே தன்னை ஆசீர்வதிக்கிறவன் சத்திய தேவனுக்குள் தன்னை ஆசீர்வதிப்பான்; பூமியிலே ஆணையிடுகிறவன் சத்திய தேவன் பேரில் ஆணையிடுவான்; ..." நமது தேவன் ஆமெனில் சத்தியத்தின், உண்மை நிறைவுடைமையின் தேவனாக இருக்கின்றார். 'Amen என்ற வார்த்தையானது நம்புதற்குரிய தன்மையை ஆலோசனை கூறுகின்றது. இதிலிருந்து "சத்தியம்" என்ற வார்த்தை பெறப்பட்டுள்ளது. சத்தியமானது இயற்கை விதிகளைப் போலவே ஆதரவு பெற்று, மாற்றமில்லாததாக உள்ளது. சத்திய தேவனும், சார்ந்திருக்கும் வன்மை பெற்றவருமான 'Elohe 'Amen என்பவர் மட்டுமே "நான் சத்தியமாய் இருக்கிறேன்" என்று கூறத் துணிய முடியும். மாற்றமில்லாதவரைப் போல நிச்சயமானதும் சார்ந்திருக்கக் கூடிய வன்மையும் பெற்றவர் இந்த அண்டத்தில் ஒருவரும் இல்லை (மல். 3:6). அவரிடத்தில் மட்டுமே யாதொரு மாறுதலும், வேற்றுமையின் நிழலும் இல்லாதுள்ளது (யாக். 1:17). நாம் நம்புவதற்குரியவர்கள் அல்ல என்று நிரூபித்தாலும், தேவன் உண்மை நிறவுடையவராய் இருக்கின்றார் (2 தீமோ. 2:13). இயேசு கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவரா யிருக்கிறார் (எபி. 13:8).*

*யேகோவா "சோர்ந்து போவதுமில்லை இளைப்படைவதுமில்லை" (ஏசா. 40:28). பூமியில் ஒருவர் தாம் மிகவும் அன்புகூர்ந்தவரின் மிக அதிகமான சார்பு வன்மையானது விட்டுக்கொடுக்கப்படவேண்டிய பொழுதும் கூட, தேவனுடைய நம்பகத் தன்மை இன்னமும் உள்ளது. அவர் தம்முடைய மாபெரும் மற்றும் விலையேறப் பெற்ற வாக்குத்தத்தங்கள் குறித்து அசட்டையாய் இருக்க முடியாது. "எங்களால் தேவனுக்கு மகிமையுண்டாகும்படி, தேவனுடைய வாக்குத்தத்தங்களெல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே" (2 கொரி. 1:20).*

*லவோதிக்கேயாவில் உள்ள சபைக்கு "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ஆமென் என்பவர் ..." (வெளி. 3:14) என்று இயேசு பேசுகையில் அக்கூற்று வெது வெதுப்பான கிறிஸ்தவர்களுக்கு (வெளி. 3:16) ஆறுதல் படுத்தக் கூறப்படாமல், தேவனுடைய பிள்ளைகளிடம் தர்க்கம் புரிந்து அவர்கள் தேவனுக்கு வைராக்கியமுள்ளவர்களாய் வாழும்படி உறுதிப்படுத்திற்று, இது இயேசுவினால் உறுதிப்படுத்தப்பட்ட பெயராயிற்று.*